JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
CC.No.163/2024
PW.9

| பெயர் | செல்வக்குமார் | தாலுகா | கடையம் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | நாராயணன் | தொழில் | டெய்லர் |
| கிராமம் | கடையம் | வயது | 29 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 14.05.2026

(எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

<u>முதல் விசாரணை:–</u>

நான் தற்போது கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லராக வேலை செய்து வருகிறேன். அசா.8 துரைசிங் என்பவரை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தேதி.மாதம், வருடம் நினைவில் இல்லை, அந்த கையொப்பத்தை எதற்காக செய்து கொடுத்தேன்என நினைவில்லை. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் எனது சொந்த வேலையாக காவல் நிலையம் சென்ற போது போலிசார் கேட்டு கொண்டதால் அந்த கையொப்பத்தை போட்டேன். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அசாஆ 3 ஆக குறியிடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 05.08.2019ம் தேதியன்று 17.30 மணிக்கு நானும்,அசா.8 துரைசிங் என்பவரும் வழக்கின் சம்பவ இடம் அருகே பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த கடையம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் கடையம் காவல்நிலைய குற்ற எண் 223/2019 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், துரைசிங் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று

போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi